அந்த நான்கு மீனவர்களையும் திரும்ப அனுப்ப ஏற்பாடுகள் செய்திட வேண்டும் எனவும் கோரப்பட்டது. இதுவரையில் நான்கு நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டு, எந்த ஒரு பதிலும் இலங்கை அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. திரும்பவும் 3-11-95-ஆம் நாளன்று இலங்கையில் உள்ள இந்திய தூதருக்கு நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு இருக்கிறது. இதுவரை பதில் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இதிலே இல்லை. நான் இதிலே கேட்கவில்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிற புயல் சேதத்தைப் பற்றிய பிரச்சினையை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம். இப்போது நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இன்று நாம் 1.30 மணிக்குள் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை முடித்தாக வேண்டும். அது கில்லட்டின் நேரம். அதனால் நாளை எடுத்துக் கொள்ளலாம். அமைச்சர் இன்றைக்கே தயாராக இருக்கிறார். நான் நேரத்தின் அருமையைக் கருதித்தான் சொல்கிறேன் அமைச்சர் இங்கு வந்து சொல்லிவிட்டுச் சென்றார், நான் இன்றைக்கே தயார் என்று. நீங்கள் பேசி, அமைச்சர் பேசி நேரம் ஆகும் என்ற காரணத்தினால்தான் அதை நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) அது நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

4. கவன ஈர்ப்பு

(அ) அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.